திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை : திரு. க. சு.கந்தசாமி., இ.ஆ.ப

ந.க..எண். 311/2019/ஆ நாள். 11.06.2019.

பொருள்: பணியமைப்பு – பேரூராட்சிகள் நிர்வாகம் – திருவண்ணாமலை மாவட்டம் – தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் பணி நியமனம் செய்து பேரூராட்சிகளில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வரும் பணியாளர்களுக்கு – பணி வரன்முறை செய்து ஆணையிடுதல் சம்பந்தமாக.

பார்வை:
1. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை கடித எண்.932/PSD-C3/2019, நாள்.09.02.2019.
2. திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவரின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.311/2019/ஆ, நாள்.28.02.2019.
3. தொடர்புடைய ஆவணங்கள்.

*********

**உத்தரவு**

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் தொகுதி நான்கு மூலம் பணியாளர்கள் தேர்வு செய்து பார்வை 1ல் காணும் உத்திரவின்படி திருவண்ணாமலை மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பணியாளர்களுக்கு பார்வை 2–ல் காணும் திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் உத்திரவின்படி கீழ்க்கண்ட பேரூராட்சிகளில் இளநிலை உதவியாளராக பணியிடம் வழங்கப்பட்டு தனியர்கள் எதிரே குறிப்பிட்டுள்ள தேதிகளில் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார்கள்.

| வ. எண் | பணியாளர்களின் பெயர் மற்றும் பதவி (திருவாளர்கள்) | பணி நியமனம் செய்யப்பட்ட பேரூராட்சியின் பெயர் | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் |
|---|---|---|---|---|
| 1 | P.பிரசாந்த<br>இளநிலை உதவியாளர் | செங்கம் பேரூராட்சி | 05.03.2019 | 05.03.2019 |
| 2 | N.நித்யா<br>இளநிலை உதவியாளர் | கண்ணமங்கலம் பேரூராட்சி | 04.03.2019 | 04.03.2019 |
| 3 | K.மாலதி<br>இளநிலை உதவியாளர் | போளூர் பேரூராட்சி | 04.03.2019 | 04.03.2019 |
| 4 | U.மணிகண்டன்<br>இளநிலை உதவியாளர் | களம்பூர் பேரூராட்சி | 06.03.2019 | 06.03.2019 |
| 5 | S. ராஜாம்மாள்<br>இளநிலை உதவியாளர் | சேத்துப்பட்டு பேரூராட்சி | 06.03.2019 | 06.03.2019 |
| 6 | C. ஆனந்தன்<br>இளநிலை உதவியாளர் | சேத்துப்பட்டு பேரூராட்சி | 06.03.2019 | 06.03.2019 |

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் வழியாக பணி அமர்த்தப்பட்டவர்கள் பணி அமர்வு ஆணை வழங்கப்படும் பொழுது பணி வரன்முறை செய்யப்பட வேண்டும் என அரசு ஆணை எண்.191, பொதுத் துறை, நாள்.01.02.1962–ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்காணும் அரசாணையின்படி, மேற்குறிப்பிட்ட பணியாளர்கள் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் நியமனம் செய்யப்பட்டுள்ள பணியாளர்கள் என்பதால், தனியர்களின் பணியினை, இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த நாளில் முற்பகல் முதற்கொண்டு பணி வரன்முறை செய்து இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது. மேலும், தனியர்களின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவினை மேற்கொண்டு அதன் நகலினை இவ்வலுவலகத்திற்கு சமர்ப்பிக்குமாறு சம்மந்தப்பட்ட பேரூராட்சி செயல் அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

மாவட்ட ஆட்சித் தலைவருக்காக,
திருவண்ணாமலை மாவட்டம்.

பெறுநர் :
சம்மந்தப்பட்ட பணியாளர்கள்,
திருவண்ணாமலை மாவட்டம். (செயல் அலுவலர் மூலமாக)
நகல் :
1. சம்மந்தப்பட்ட பேரூராட்சி செயல் அலுவலர்கள், திருவண்ணாமலை மாவட்டம்.
2. ‘ஆ’ இருக்கை இருப்பு கோப்பு.